**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070120225092

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.04.2022

Accepted: 20.05.2022

Published: 01.07.2022

Citation:
Sankar, M. "Professor Discourse and Learning & Teaching Principles." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 1, 2022, pp. 26–33.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i15092.

*Corresponding Author:
sankartamilskcgri@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Professor Discourse and Learning & Teaching Principles

**Dr. M. Sankar**
*Assistant Professor, Department of Tamil Studies*
*Sri Kaliswari College (Autonomous), Sivakasi, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0003-4981-8615*

**Abstract**
Learning is not a human-only activity. This learning process also applies to animals and birds. For this, time, place, and environment are very important. These are suitable for planned learning. The result of this learning is behavior change. This change in behavior should be positive and should not be different. Therefore, the teaching ability of the teacher depends on the students. It depends on the mood, intelligence, family environment, willingness and readiness. Did the students learn the messages taught by the teacher? To find out, trainings and exercises are conducted today. If they are not successful in them then the teacher should change his teaching activity. Thus learning and teaching can be said to include all three: student, teacher and proper lesson. The teacher stands between the student and the lesson and encourages the student's ability to learn. Accordingly, the knowledge base of student is expanding. The teacher should also keep expanding his knowledge. We can show the proof of the text of Irayanar Kavalviyal that these three traditions have come continuously in Tamil. Interpreters come as a continuation of the tradition of learning and teaching. Grammatical and literary texts that appeared in Tamil have been a continuation of the educational tradition and have performed a teaching function. We see this situation since 11th century AD. Teaching methods can be realized in the form of explaining the meaning, in the form of pointing out formal differences and in the form of refuting the ideas of others. Therefore, everyone who appeared in Tamil can be considered as a continuation of the knowledge tradition, that is, the educational tradition. The statement of M. Y. Aurobindo will confirm this point.

**Key Words:** Agaporul, Tholkappiyam, Learning Skills, Teaching Method, Text Method

**References**

1. Aravindan, MY. 2008. *Narratives*, Chennai, Manivasakar Pathipagam, (Second Edition).
2. Gurusamy, S. 2008. *Perasiriyarin Urai neri*, Chennai, Irani Pathipagam, (First Edition).
3. Tholkappiyam. 2007. *Porulathigara moolm Pinagiyalgalum Perasiriyamum*, Part Two, World Tamil Research Institute, Chennai, Ganeshiyar Pathippu, (Second Edition).
4. Mohan, R and Nellai N. Chokalingam, 2003. *Urai Marabugal*, Meiyappan Pathipagam, (First Edition).

# பேராசிரியர் உரையும் கற்றல், கற்பித்தல் நெறிகளும்

*முனைவர் மு. சங்கர்*
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

***ஆய்வுச்சுருக்கம்***
*கற்றல் என்பது மனிதனுக்கு மட்டும் உரிய செயலன்று. விலங்கு, பறவை உள்ளிட்ட அஃறிணைகளுக்கும் இக்கற்றல் செயல் உரியது. இதற்குக் காலம், இடம், சூழல் ஆகியவை மிக முக்கியம். இவையே திட்டமிட்ட கற்றலுக்குப் பொருத்தமாக இருக்கும். இக்கற்றலின் விளைவு நடத்தை மாற்றமே ஆகும். இந்நடத்தை மாற்றம் நல்லவிதமாக இருக்க வேண்டுமே ஒழிய, மாறுபட்டதாக இருக்கக் கூடாது. எனவே, ஆசிரியரின் கற்பிக்கும் திறன் மாணவர்களைப் பொறுத்து அமைதல் நலம். இஃது மனநிலை, அறிவுத்திறன், குடும்பச் சூழல், விருப்பம், தயார்நிலை ஆகியவற்றைப் பொறுத்தே அமையும். ஆசிரியர் கற்பித்த செய்திகளை மாணாக்கர் கற்றார்களா? என அறிய தேர்வுகளும் பயிற்சிகளும் இன்று நடத்தப்பெறுகின்றன. அவற்றுள், அவர்கள் வெற்றி பெறவில்லை என்றால், ஆசிரியர் தமது கற்பித்தல் செயல்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆக, கற்றலும் கற்பித்தலும் பாடங்கேட்போர் (மாணவர்), பாடஞ்சொல்பவர் (ஆசிரியர்), உரிய பாடம் (பனுவல்) ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது எனலாம். ஆசிரியர் பாடங்கேட்போருக்கும் பாடத்திற்கும் இடையே நின்று பாடங்கேட்போனின் கற்றல் திறனை ஊக்கப்படுத்துகின்றார். அதற்கேற்பவே பாடங்கேட்போனின் அறிவெல்லை விரிவடைகின்றது. பாடஞ்சொல்பவரும் தமது அறிவெல்லையை விரிவுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டும். தமிழில் இம்மூன்று மரபும் தொடர்ச்சியாக வந்துள்ளது என்பதற்கு இறையனார் களவியல் உரையைச் சான்றாகக் காட்டலாம். கற்றல், கற்பித்தல் மரபின் தொடர்ச்சியாக உரையாசிரியர்கள் வருகின்றனர். தமிழில் தோன்றிய இலக்கண, இலக்கிய உரைகள் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக இருந்து, கற்பித்தல் செயல்பாட்டைச் செய்துள்ளனர். இந்நிலையைக் கி.பி.11ஆம் நூற்றாண்டு முதலே காண்கின்றோம். சொற்பொருளை விளக்கிக்கூறும் பாங்கிலும் முறையான பாடவேறுபாட்டைக் குறிப்பிடும் பாங்கிலும் பிறருடைய கருத்துக்களை மறுத்துரைக்கும் பாங்கிலும் அவர்தம் கற்பித்தல் நெறிகளை உணரலாம். எனவே, தமிழில் தோன்றிய ஒவ்வொருவரையும் அறிவுப் பாரம்பரியத்தின் அஃதாவது, கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே கருதலாம் என்ற மு.வை.அரவிந்தனின் கூற்று உறுதி செய்யும்.*
***முக்கியச் சொற்கள்:*** *அகப்பொருள், தொல்காப்பியம், கற்றல் திறன், கற்பித்தல் நெறி, உரை நெறி.*

இறையனார் அகப்பொருள் உரையும் சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரையும் பேராசிரியர் திருக்கோவையாருக்கு எழுதிய உரையும் காலிங்கர் திருக்குறளுக்கு எழுதிய உரையும் ஆசிரிய மாணவர்களுக்குப் பாடம் கூறும் வகையில் வினா விடையாக உள்ளன. மற்ற உரையாசிரியர்களின் உரையிலும் ஆங்காங்கே பல இடங்கள் இவ்வாறு அமைந்துள்ளன[1] என்கின்றார். ஆகத் தமிழ்ச் சமூகத்தின் கல்வி வரலாற்றை அறிய உரைகள் முக்கியப் பங்காற்றுகின்றன எனலாம். எனவே, தமிழ்க் கல்விப் பராம்பரித்தின் அடையாளத்தைப் பேராசிரியரின் உரைநெறி மூலமாக வெளிக்கொணர்ந்து, அவர்தம் கற்பித்தல் நெறிகளை இனங்காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பாடங்கேட்கும் மரபு பற்றியும் பாடஞ்சொல்லும் மரபு பற்றியும் நூலைப் பயிலும் முறை பற்றியும் நன்னூல் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. (காண்க: நன்னூல் நூற்பாக்கள் - 36, 40, 41).

இவற்றைக் கல்வியியல் மரபின் அடையாளங்களாகக் கருதலாம். தொல்காப்பியத்திலேயே இவ்வுரை மரபு இருந்தது என்பதற்கு மரபியலில் உள்ள 104 ஆவது நூற்பாவைச் சான்றாகக் காட்டலாம்.

**மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்**
**தன்னூ லானு முடிந்த நூலானு**
**மையமு மருட்கையுஞ் செவ்விதி னீக்கித்**
**தெற்றென வொருபொரு ளொற்றுமை கொளீஇந்**
**துணிவொடு நிற்ற லென்மனார் புலவர்**
**(தொல்.செய்.பேரா.உரை.104)**

இந்நூற்பாவின் மூலம் உரைமரபு என்பது இலக்கண, இலக்கியக் கல்வியின் ஓர் அங்கமாகவே அமைந்துள்ளமை கண்கூடு. கற்போர் தமக்கு ஏற்படும் ஐயங்களை வினாக்களாக எழுப்பி, அதற்கான விடைகளைக் கற்பிப்போர் கூறுகின்றார். இதற்கு முன்னரே குறிப்பிட்டது போன்று கற்பிப்போருக்குப் பல்வகைப்பட்ட நூலறிவு இன்றியமையாததாகக் கருதப்பெறுகின்றது.

## பேராசிரியர் - அறிமுகம்

தமிழ் இலக்கிய மரபில் பேராசிரியர் என்ற பெயரில் அறுவர் இருந்துள்ளனர். 1. தொல்காப்பியப் பொதுப்பாயிரம் செய்த பேராசிரியர் 2. யாப்பருங்கல விருத்தியுரை காட்டும் பேராசிரியர் 3. திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியர் 4. தமிழ் நாவலர் சரிதை சுட்டும் பேராசிரியர் 5. குறுந்தொகைக்கு உரை வரைந்த பேராசிரியர் 6. தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை கண்ட பேராசிரியர். இவ்வறுவர்களுள், இக்கட்டுரை தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை கண்ட பேராசிரியரை மட்டும் ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொள்கின்றது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இறுதி நான்கு இயல்களுக்கு (அஃதாவது மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல்) உரை எழுதிய பேராசிரியர் கி.பி.12 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் ஆவார். இவர்தம் புலமைத் திறத்தைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் நன்கு காட்டும். இவர் வைதிக நெறியைச் சார்ந்தவர்[2].

இவர் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை செய்தார் என்பதற்குப் பல சான்றுகள் இவர்தம் உரையில் உள. அஃது ஆகாமைக்குக் காரணம் களவியலுட் கூறினாமென்பது (தொல்.மெய்.பேரா.18), இவை, களவியலுள் (111) உயிர்மெலிந்தவிடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவையன்றியும் புணர்ச்சி நிகழ்ந்தவாறு (தொல்.மெய். பேரா.20) என்று பேராசிரியர் கூறுவதால் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார் என்பது போதரும்.

## பேராசிரியர் உரை காட்டும் கற்பித்தல் நெறிகள்

பேராசிரியர், தொல்காப்பியரிடத்துப் பெரிதும் மதிப்புடையவர். அவரைத் தெய்வப் புலவராய் - வினையின் நீங்கி விளங்கிய அறிவினராய்ப் போற்றுகின்றார். தொல்காப்பியத்தில் குற்றம் குறை எதுவும் இருக்க முடியாது என்று மிக உறுதியாய் நம்புகின்றார் என்று மு.வை.அரவிந்தன் எழுதுவதன் மூலமாகவும் முற்காலத்து நூல்களை மிகவும் போற்றியும் மதித்தும் பிற்காலத்து நூல்களைப் பெரிதும் மறுத்து தாக்கியும் எழுதிச் செல்வது பேராசிரியர் இயல்பாகும் என்று இரா.மோகன் குறிப்பிடுவதன் மூலமாகவும் இவர் தம் உரையின் தனித்தன்மையை அறிய நேர்கின்றது.

### அ. வினா - விடைப் பாங்கு

பண்டைய உரையாசிரியர்களிடம் காணப்பட்ட இந்நெறியைப் பேராசிரியர் உரையிலும் காண்கின்றோம். வினாவும் விடையுமாகச் சிறுசிறு வாக்கியங்களைக் கொண்டு செம்மையாக விளக்கம் தருகின்றார்.

கூழை விரித்தல் என்பதற்கு உரை எழுதும் போது, கூழைவிரித்தலென்பது,

மெய்யு மெய்யுந் தீண்டிய வழி மெல்லியன் மகளிர்க்கு வரும் வேறுபாடு நான்கினுண் முதற்கண்ண தெனப்படும். என்னை? தன்னுள்ளத்தில் நிகழ்ந்த வேறுபாட்டினை அக்காலத்துத் தலைமகள் நிறையுடையளாதலாற் கரந்தொழுகுதற்பாலளே. அங்ஙனங் கரக்குங்கால், தன்வயத்தாகிய உடம்பு பற்றி வரும் வேறுபாட்டினைத் தாங்கும். அங்ஙனந் தாங்குங்கால் உடம்பொடு தொடர்புடையவாகி வேறுபட்ட தலைமயிரினது முடி உள்ள நெகிழ்ச்சியானே தன்வயத்ததன்றி நெகிழும். ஆகலின், இது முற்கூறப்பட்டது. பிற சுவை பற்றியும் உலகினுட்மயிர்க்குவந்த வேறுபாட்டினைக் கூறுப. என்னை? ஒன்றன் மதுரச்சுவைக்கு அதிசயங் கூறுவார் மயிரினைச் செவ்வனின்றன வென்பது போலக் கொள்க. அக்கூழை விரித்தற்கு ஏதுவாயினாள் இவளாகலின், அதனைச் சினை வினையானன்றி முதல் வினையாற் கூறினானென்பது (தொல். மெய்.பேரா.14) என்கின்றார்.

மேலும், செய்யுளியலில் செந்தொடை எங்ஙனம் செய்யுட்குப் பொலிவு செய்யும்? என்ற வினா எழுந்துள்ளது போலும். அதனால்தான் பேராசிரியர் அதை ஓர் உவமை மூலம் விளக்கமுற்பட்டுள்ளார்.

செந்தொடையுஞ் செய்யுட்பொலிவு செய்யுங்காற் கொன்றையுங் கடம்பும்போல நின்றவாறே நின்று தொடைப்பொலிவு செய்யுமென்பதாம் (தொல்.செய்.பேரா.94).

பேராசிரியர் தம் உரையில் பல இடங்களில் இனிக்கூறுதும், என்னை, என்னையெனின், எனின், என்ன பெயர்த்தோவெனின், முன்னர்ச் சொல்லுதும், காட்டுதும், யாங்ஙனம் என்பன போன்ற சொற்களையும் தொடர்களையும் கையாண்டுள்ளார். இவை வினா - விடை பாங்கில் அமைபவையாகும்.

## ஆ. தொகுத்துக் கூறல்

ஆசிரியர் பாடஞ்சொல்லும்போது, நூல் பற்றிய சுருக்கத்தையோ அல்லது இயல் பற்றிய சுருக்கத்தையோ முன்வைத்தே கற்பித்தலைத் தொடங்குவது வழக்கம். இயல் பற்றிய அறிமுகம், அவ்வியல் என்ன நுவல்கின்றது? என்பதை மாணாக்கர் முன்கூட்டியே அறிந்து கொண்டால், அவ்வியல் பற்றிய புரிதலோடு அதனுள் பயணிக்கமுடியும். இஃது கற்பித்தல் மரபின் அடிப்படை. இந்த அடிப்படையை நன்கு உணர்ந்து கொண்டவராகப் பேராசிரியர் இருக்கின்றார்.

ஒவ்வோரியலின் தொடக்கத்திலும் அவ்வியலுக்கான காரணத்தைக் கூறி, அதனுள் என்ன என்ன இடம்பெறுகின்றது? எனக் கூறுவது இவர்தம் உரைநெறியாகக் கருதமுடிகின்றது.

மெய்ப்பாட்டியலின் தலைச்சூத்திரத்திற்கு உரை வரைந்த பேராசிரியர், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், மெய்ப்பாட்டியலென்னும் பெயர்த்து. மெய்ப்பாடென்பன சில பொருள் உணர்த்தினமையின் அப்பெயர்த்தாயிற்று. இதனானே ஒத்து நுதலியதூஉம் மெய்ப்பாடு உணர்த்துதலென்பது பெற்றாம். மெய்ப்பாடென்பது பொருட்பாடு. அஃதாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல். அதனது இலக்கணங் கூறிய ஓத்தும் ஆகுபெயரான் மெய்ப்பாட்டியலென்றாயிற்று. மேலோத்தினோடு இவ்வோத்திடை இயைபென்னையோவெனின், மேலை ஓத்துக்களுட் கூறப்படும் ஒழுகலாற்றிற்கும் காட்டலாகாப்பொருள் (தொ.பொ.53) என்றவற்றிற்கும் எல்லாம் பொதுவாகிய மனக்குறிப்பு இவையாதலின் இவற்றை வேறுகொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வேறோரோத்தாக வைத்தமையானே, எல்லாவற்றோடும் இயைபுடைத்தென்பது.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அம்மெய்ப்பாடு பிறர் வேண்டுமாற்றான் இத்துணைப் பகுதிப்படுமென்றுணர்த்து தனுதலிற்று (தொல்.மெய்.பேரா.1) என்கின்றார்.

### இ. இயல் இயைபு தருதல்

பொதுவாக, எல்லா உரையாசிரியர்களிடமும் காணப்படும் பொது இயல்பாக இது அமைந்துள்ளது. அவர்கள் இயல்களுக்கிடையே இயைபு காட்டியுள்ளனர். அம்முறையையே பேராசிரியரும் பின்பற்றியுள்ளார். சான்றாக, உவமவியலின் தலைச்சூத்திரத்திற்கு உரை எழுதும்போதும் மரபியலின் தலைச்சூத்திரத்திற்கு உரை எழுதும்போதும் பேராசிரியர் இயல் இயைபு காட்டியுள்ளார்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உவமவியல் என்னும் பெயர்த்து. உவமம் என்பது, ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல். இதனானே இவ்வோத்து நுதலியதூஉம் உவமப் பொருளே கூறுதலாயிற்று. மற்று அகம்புறம் என்பனவற்றுள் இஃது என்ன பொருளெனப்படுமோ வெனின், அவ்விரண்டுமெனப்படும். மெய்ப்பாடு போல என்பது (தொல்.உவ.பேரா.1).

மரபென்ற பொருண்மை என்னையெனின், கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ் செய்யுளியலுண் மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமன்றி, இருதிணைப் பொருட்குணனாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும் அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும் அவை பற்றி வரும் உலகியன் மரபும் நூன் மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது (தொல். மரபு. பேரா.1).

### ஈ. முழுமை நோக்கு

பேராசிரிய உரை தொல்காப்பியப் பின்னான்கு இயல்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளன. ஆனால், பொருளதிகாரம் முழுமைக்கும் அவர் உரை கண்டுள்ளார் என்பதற்கான சான்றுகள் உரையினுள் காணப்படுகின்றன. இஃது ஒரு புறமிருக்க, தொல்காப்பிய முழுவதையும் கற்றுப் புலமையுடையவராக இவர் திகழ்ந்துள்ளார்.

எழுத்தியல் வகையினை மாட்டேற்றான் முப்பத்து மூன்றெனக் கொள்வதன்றிப் பதினைந்தென்று கொள்ளுமாறென்னையெனின் எழுத்தோத்தினுட் குறிலு நெடிலும் உயிரும் மெய்யும் இன மூன்றுஞ் சார்பெழுத்து மூன்றுமெனப் பத்தும் இயல்புவகையான் ஆண்டுப் படுத்தோதினான் (தொல்.செய்.பேரா.2).

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இறுதி இயலான மரபியலின் இறுதிச் சூத்திரத்திறற்கு (32 உத்திகள்) உரை விளக்கம் தரும்போது பேராசிரியரின் இலக்கணப் புலமையை அறியலாம்.

எல்லாமென்னும் விரவுப்பெயருள் உயர்திணை கூறி வற்றுச்சாரியை பெறாமையான் அது பெற்றுவந்த அஃறிணைக் கூறே முடித்தலும் அது (தொல்.செய்.பேரா.110).

இடைச்சொல்லோத்தினுள் வினாவென்றோதாத ஆகாரம் வாராததுடன் ஆண்டு வினாவென்று

**ஓதிய ஏகார ஓகாரங்கள்............**

**(தொல்.செய்.பேரா.110).**

### உ. பல்துறைப் புலமை

கற்பித்தலில் இன்றியமையாதது பாடஞ்சொல்லும் ஆசிரியர் பன்முகத் தன்மையுடையவராக இருத்தலாகும். இப்பன்முகத் தன்மை அவரது அறிவுப் புலமையைக் காட்டும். பேராசிரியரும் பன்முகப் புலமையுடையவராக இருந்துள்ளார் என்பதைச் ச.குருசாமியின் கூற்று வழி அறிந்து கொள்ளலாம்.

இவர் தமிழ் இலக்கிய இலக்கண அறிவோடு வடமொழி அறிவு, கால அறிவு, வரலாற்று அறிவு, அகம், புறம், மெய்யுணர்வியல் அறிவு, உளவியல், அறவியல், அளவியல், வானவியல், விலங்கியல், பாலியல், சமூகவியல்,

அரசியல் ஆகிய அறிவும் பெற்றிருந்தார். அத்துடன் இசைநூல், கூத்தநூல், யாழ்நூல், கந்தருவநூல், நியாய நூல், மொழிபெயர்ப்பு நூல் முதலான நூல்களிலும் புலமை உடையவராக விளங்கினார் என்பதை அவர்தம் உரைக்குறிப்புகளால் அறியலாம்.[3]

**ஊ. பாடவேறுபாடு காட்டல்**

கற்றல், கற்பித்தலில் மிகவும் விளக்கப்பட வேண்டிய ஒரு கூறாக அமைவது பாட வேறுபாடு காட்டுவதாகும். பேராசிரியர் தமது உரையில் பாடவேறுபாட்டைக் கூறியதோடு நில்லாது, தாம் கொண்ட பாடத்திற்கான காரணத்தையும் கூறி இருக்கின்றார்.

**சான்றுகள்**

இளம்பூரணர் - புகழ்மை (தொல்.மெய்.9)
பேராசிரியர் - இசைமை (தொல்.மெய்.9)
இளம்பூரணர் - மொழிகரந்து மொழியினது பழிகரப் பாகும் (தொல்.செய்.126)
பேராசிரியர் - மொழிகரந்து சொல்லினது பழிகரப் பாகும் (தொல்.செய்.122)

மறுத்துரைக்கும் போதும் நயமாக மறுக்கின்றார். மூல நூலாசிரியரின் கருத்தைப் போற்றி, தமது கருத்தை நிலைநாட்டுதல் என்பது கற்பித்தலின் முக்கியமான அம்சம்.

**நண்டுந் தும்பியு நான்கறி வினவே**
**(தொல்.மரபு.31)**

என்ற நூற்பாவிற்கு உரை கூறுகையில், மெய்யுடைமையின் ஊற்றுணர்வும் இரைகோடலின் நாவுணர்வும் நாற்றங்கோடலின் மூக்குணர்வும் கண்ணுடைமையிற் கண்ணுணர்வுமுடையவாயின என்கின்றார். மேலும், மூல நூலாசிரியர் கூறும் கருத்தைப் போற்றி, நண்டிற்கு மூக்குண்டோவெனின் - அஃது ஆசிரியன் கூற்றான் உண்டென்பது பெற்றாம் (தொல்.மரபு.31) என்கின்றார்.

**எ. சொற்பொருள் விளக்கம்**

பழஞ்சொற்களின் பொருள் விளக்காத போது உரையாசிரியர்கள் விளக்கம் தர முற்பட்டுள்ளனர். அகராதியியல் வளராத சூழலில் ஒன்றன் பொருளைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற நிலையில் உரையாசிரியர்களின் கற்பித்தல் செயல்பாடு இருந்துள்ளது. அதில் பேராசிரியருக்கும் பங்குண்டு.

நகையென்பது சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும் அளவே சிரித்தலும் பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப

**இளிவரலென்பது இழிபு**
**மருட்கை யென்பது வியப்பு**
**அச்சமென்பது பயம்**
**பெருமித மென்பது வீரம்**
**வெகுளி யென்பது உருத்திரம்**
**உவகை யென்பது காம முதலிய மகிழ்ச்சி**
**(தொல்.மெய்.3)**

**ஏ. வைப்புமுறை கூறல்**

பேராசிரியர் தமது உரையில் மெய்ப்பாட்டியலுக்கு அடுத்து உவமவியலையும் அதனை அடுத்து செய்யுளியலையும் அமைத்ததற்கான இயைபுடைமையைக் குறிப்பிட்டுள்ளார். இதனை உவமவியலின் தலைச்சூத்திரத்தில் விளக்குகின்றார்.

......... அஃதேல் உள்ளுறையுவமஞ் செய்யுட்கே உரிமையின் அதனைச் செய்யுளியலுட் கூறுகவெனின், உவமப் பகுதியாத லொப்புமை நோக்கி ஓரினப் பொருளாக்கி ஈண்டுக் கூறினானாயினும், வருகின்ற செய்யுளியற்கும் இயையுமாற்றான் அதனை ஈற்றுக்கண் வைத்தான் மேற்பொருட்புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து என்னை? உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றானாகலின், எங்ஙனமோவெனின் (தொல்.மெய்.1).

இவ்வாறு இயல் வைப்புமுறையைத் தெளிவாக விளக்குகின்றார் பேராசிரியர். இஃது ஓர் ஆசிரியனுக்குரிய எடுத்து ரைக்கும் திறனில் ஒன்று.

### ஐ. மேற்கோள் காட்டல்

சிறந்த ஆசிரியருக்குரிய அறிதிறன் என்பது பிற நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி, மாணவர்களுக்கு விளங்காப் பகுதிகளை விளங்க வைக்க வேண்டும். அவ்வகையில், பேராசிரியர் பண்டைய இலக்கண, இலக்கியங்களில் இருந்து மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார். இவை அவர்தம் பரந்த புலமையையும் நினைவாற்றலையும் காட்டுகின்றன. எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், இறையனார் களவியல், புறப்பொருள் வெண்பா மாலை, மூதுரை, கொன்றை வேந்தன், சிற்றட்டகம், பல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி, விளக்கத்தார் கூத்து முதலிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.

### மேற்கோள் நூல்கள் பயின்று வரும் நூற்பா எண்

நற்றிணை தொல். பொருள். மெய்.25
குறுந்தொகை தொல். பொருள். மெய்.13
ஐங்குறுநூறு தொல். பொருள். உவ.25
அகநானூறு தொல். பொருள். மெய்.13, 22
கலித்தொகை தொல். பொருள். மெய்.12, 22
புறநானூறு தொல். பொருள். செய்.10, 26
பரிபாடல் தொல். பொருள். செய்.120, 121
திருமுருகாற்றுப்படை தொல். பொருள். செய்.28, உவ.10
பொருநராற்றுப்படை தொல். பொருள். செய்.23
பெரும்பாணாற்றுப்படை தொல். பொருள். மெய்.8
சிறுபாணாற்றுப்படை தொல். பொருள்.உவ.9
பட்டினப்பாலை தொல். பொருள். செய்.23
நெடுநல்வாடை தொல். பொருள். செய்.94
மலைபடுகடாம் தொல். பொருள். உவ.14, 16
குறிஞ்சிப்பாட்டு தொல். பொருள். மெய்.23
மதுரைக்காஞ்சி தொல். பொருள். செய்.14
திருக்குறள் தொல். பொருள். மெய்.13
நாலடியார் தொல். பொருள். மெய்.7, செய்.7
பழமொழி நானூறு தொல். பொருள். செய்.177
ஐந்திணை ஐம்பது தொல். பொருள். மெய்.24
திணைமாலை நூற்றைம்பது தொல். பொருள். மரபு.90
களவழி நாற்பது தொல். பொருள். செய்.27, 158
சிலப்பதிகாரம் தொல். பொருள். செய்.19, 149
முத்தொள்ளாயிரம் தொல். பொருள். உவ.19, செய்.9
மூதுரை தொல். பொருள். செய்.72
கொன்றை வேந்தன் தொல். பொருள். செய்.149
செயிற்றியம் தொல். பொருள். மெய்.1
யாப்பருங்கல விருத்தி தொல். பொருள்.உவ.19
காக்கைபாடினியம் தொல்.பொருள். செய்.1
புறப்பொருள் வெண்பா மாலை தொல். பொருள். செய்.9
இடைக்காடனார் தொல். பொருள். செய்.99
இறையனார் களவியல் தொல். பொருள். செய்.186
விளக்கத்தனார் தொல். பொருள். செய்.115, 146
சிற்றட்டகம் தொல். பொருள். செய்.193
பல்காப்பியம் தொல். பொருள். மரபு.94

### முடிவுரை

பண்டைய இலக்கண, இலக்கியங்களைப் புரிந்துகொள்ளவதற்குத் துணை செய்வன உரைகளே ஆகும். இவ்வகையில் பேராசிரியரின் உரை சிறப்பாகக் கருத்தக்கது. வினா - விடைப் பாங்கு, தொகுத்துக்கூறல், இயல் இயைபு தருதல், முழுமை நோக்கு, பல்துறைப் புலமை, பாடவேறுபாடு காட்டல், சொற் பொருள் விளக்கம் கூறுதல், இயல்களின் வைப்புமுறையை விளக்குதல், மேற்கோள் காட்டும் திறன் முதலிய கற்றல்,கற்பித்தல் நெறிகளைப் பேராசிரியர் உரைவழி அறிந்துகொள்ளலாம்.

பேராசிரியர் தாம் எடுத்துக்கொண்ட சூத்திரங்களின் கருத்தை விளக்கி எழுதி, அரிய சொற்களுக்கு விளக்கம் தந்து, தொல்காப்பியரின் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். இஃது ஓர் ஆசிரியனுக்கு இன்றியமையாத கற்றபித்தல் திறனாகும். மாணவர்களுக்கு எங்கெங்கு ஐயம் எழுமோ அங்கெல்லாம் தம் கருத்தைக் கூறியும் பிற நூல்களில் இருந்து சான்றுகள் காட்டியும் அந்த ஐயத்தைக் களைய முற்பட்டுள்ளார் பேராசிரியர்.

### குறிப்புகள்

1. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.66.
2. இரா. மோகன் நெல்லை ந. சொக்கலிங்கம், உரை மரபுகள், ப.149.
3. ச.குருசாமி, பேராசிரியர் உரைநெறி, ப.26.

### உசாத்துணை நூல்கள்

1. அரவிந்தன், மு.வை. உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2008 (இரண்டாம் பதிப்பு).
2. குருசாமி, ச. பேராசிரியரின் உரைநெறி, இராணி பதிப்பகம், சென்னை, 2008 (முதல் பதிப்பு).
3. தொல்காப்பியம், பொருளதிகார மூலம் பின்னாகியல்களும் பேராசிரியமும், இரண்டாம்பாகம், கணேசையர்பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007 (இரண்டாம் பதிப்பு).
4. மோகன், இரா. நெல்லை ந. சொக்கலிங்கம், உரை மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், 2003 (முதல் பதிப்பு).